2011 ஆகஸ்ட் 9]

தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் திருந்திய நெல் சாகுபடி என்ற நிலையிலே மாற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

துணை மின் நிலையம்

***1384—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, கீழக்குறிச்சி ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பட்டுக்கோட்டை தொகுதி, கீழக்குறிச்சி ஊராட்சியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, கீழக்குறிச்சி பகுதியிலே துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று அந்தப் பகுதி மக்களால் நீண்ட காலமாகக் கோரிக்கை வைக்கப்பட்டு, கிராம மக்களால் ஒரு இடமும் மின்சாரத் துறைக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே, அரசைப் பொறுத்தவரையிலே விரைவில் தக்க நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, பட்டுக்கோட்டை தொகுதியைப் பொறுத்தவரையில் இத்துடன் ஒரு கோரிக்கையையும் சேர்த்து சொல்ல விரும்புகின்றேன்.*

[2011 ஆகஸ்ட் 9

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே பட்டுக்கோட்டை பகுதி கடைமடைப் பகுதி. அந்தப் பகுதியைப் பொறுத்தவரையிலே பல்வேறு இடங்களிலே விவசாயிகள் போர்வெல் அமைத்து விவசாயம் செய்யக்கூடிய பகுதிகளிலே, அதிக அளவிலே transformers பழுதடைந்து மாற்றித் தருவதற்கு சற்று காலதாமதமாகிறது என்று சொல்கிறார்கள். எனவே, அரசைப் பொறுத்தவரையில் அதிக அளவிலே transformers order செய்து, வாங்கிக் கொடுத்து, அந்த காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஒப்புயர்வற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்பொழுது தமிழகத்தை மீண்டும் ஒளிமயமான மாநிலமாக ஆக்கிட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அவர்கள் பொறுப்பேற்றபின் இந்தக் குறுகிய காலத்திலேயே, பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, இந்தத் துறைக்கு நல்ல அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள், ஆணையிட்டு இருக்கிறார்கள். அதனடிப்படையிலே மின்சார உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமல்லாமல் அதற்குரிய விநியோக அமைப்பினையும் சீரமைக்க வேண்டுமென்று அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மின்சார உற்பத்தியும், விநியோகமும் சரியாகப் பராமரிக்கப்பட்டால்தான் பிரச்சினைகள் முழுமையாக தீரும் என்ற அடிப்படையிலே, இப்பொழுது மின் விநியோகப் பணிகள், புதிய மின் நிலையங்கள் அமைப்பது, புதிய transformers பொருத்துவது, cable, feeders மற்ற எல்லா சாதனங்களையும் உடனுக்குடன் சரி செய்வது ஆகியவற்றைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்பொழுது நாங்கள் பொறுப்புக்கு வந்தபோது தமிழ்நாடு மின்சார வாரியத்திலே ஒரு transformer கூட இருப்பு இல்லை; ஒரு feeder இல்லை, conductor இல்லை, meter இல்லை, எதுவுமே இல்லை. அதனால் இல்லை, இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. அந்த நிலையிலே வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். Power–ம் இல்லை என்று சொன்னாலும்கூட, இப்பொழுது அம்மா அவர்கள்

2011 ஆகஸ்ட் 9]

ஆட்சிக்கு வந்ததற்குப் பின்பு உடனடியாக இந்த உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுத்து, மிக விரைவிலேயே, ஓரிரு வாரங்களுக்குள்ளாகவே இந்த transformers, மற்ற தேவையான உபகரணங்கள் அந்தந்தப் பகுதிகளுக்கு வழங்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, கீழக்குறிச்சியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்துகின்ற பணி நடைபெற்று வருகிறது. நிலம் கையகப்படுத்துகின்ற பணி முழுமை பெற்றவுடன், உடனடியாக புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படுகின்ற பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நம்பிக்கையான பதிலுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து 3 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பளித்தும், தொடர்ந்து 3 முறை என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த, மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கின்ற கழகத்தினுடைய பொதுச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்க விரும்புவது-மேலூர் தொகுதியிலுள்ள கொட்டாம்பட்டி, சேக்கிப்பட்டி போன்ற பகுதிகளில் மக்கள் விவசாயத்தையே நம்பியிருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு

வாய்ப்பாக இருக்கும்-ஆகையால், மேலூருக்கும் நத்தம் தொகுதிக்கும் இடையிலே இருக்கின்ற மேலவளவு பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் இக்கேள்வி பட்டுக்கோட்டை பற்றியது, கொட்டாம்பட்டி பற்றியது இல்லை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கனிவுடன் சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, செல்லூரில் துணை மின் நிலையம் அமைக்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வரக்கூடிய நடவடிக்கை பற்றிய நிலையை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2. ஒலிவாங்கிகளை உறுப்பினர்களின் உயரத்திற்கேற்ப மாற்றியமைக்கும் வசதி செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக ஒரு கோரிக்கையை உங்கள் முன் வைக்க*